

தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் ஆறுமுகநேரி தனியார் மண்டபத்தில் நடந்தது. இதில் அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் பேசுகையில் வருகின்ற 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 200 இடங்களுக்கு மேல் தி.மு.க. வெற்றி பெற்று சாதனைப்படைக்கும் என பேசினார்.உடன் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி நல்லூர் தெற்கு ஒன்றியம் பாசி குளம் கிராமத்தில் இருந்து பெலாந்துறை, கணபதி குறிச்சி, கிளிமங்கலம், குருக்கத்தாஞ் சேரி, பெண்ணாடம், விருத்தாசலம் வழியாக சென்னைக்கு புதிய அரசு பேருந்து வழித்தடத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!

## திரு.வி.க. நகர் தெற்கு பகுதிக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் எம்.சாமிக்கண்ணு அறிக்கை!

சென்னை, செப்.4

திரு.வி.க. நகர் தெற்கு பகுதிச் செயலாளர் எம்.சாமிக்கண்ணு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பகுதிச் செயலாளர் எம்.சாமிகண்ணு தலைமையில் திரு.வி.க.நகர் தெற்கு பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுகிறது. இதில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மேயர் பிரியாராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி., வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்கின்றனர்.

திரு.வி.க.நகர் தெற்கு பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (04.09.2024) மாலை 04.00 மணியளவில் சமூக நலக்கூடம், வெங்கடாத்திரி தெரு, குயப்பேட்டை, சென்னை 12-ல் நடைபெறுகிறது.

இதில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும், இந்து அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சருமான பி.கே.சேகர்பாபு கலந்துகொண்டு ஆலோசனை வழங்கி சிறப்பிக்கிறார்.

மேலும் மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி., கழக துணை அமைப்பு செயலாளரும், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினருமான ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. ஆகியோரும் பங்கேற்று சிறப்புரையா ற்றுகின்றனர்.

இக்கூட்டத்திற்கு திரு.வி.க.நகர் தெற்கு பகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு திரு.வி.க. நகர் தெற்கு பகுதி கழகத்தின் செயலாளர் எம்.சாமி கண்ணு கேட்டுக்கொண்டுள்ளார்.

## எஸ். புதூர் சிங்கம்புணரியில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### அமைச்சர் கே.ஆர் .பெரிய கருப்பன் சிறப்புரை!

சிவகங்கை, செப். 4-

கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் சிவகங்கை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்று வருகிறது.

இதில் ஒரு கட்டமாக திருப்பத்தூர் தொகுதி எஸ்.புதூர் ஒன்றியம் மணியார் பட்டி திருமண மண்டபத்திலும் சிங்கம்புணரி யில் காந்திமதி கோல்டன்பேலஸ் திருமண மண்டபத்தில் ஒருங்கிணைந்த ஒன்றியம் பேரூர் கழகத்தின் சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

ஒன்றிய செயலாளர்கள் பூமிநாதன் கே. பாலசுப்பிரமணியன் பி.செல்வராஜ் ஆகியோர் வரவேற்றுப் பேசினார்கள்.

கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் அம்பல முத்து எம்.சோமசுந்தரம், பேரூர் கழகச் செயலாளர் கதிர்வேல், அவை தலைவர் சிவக்குமார், பேரூராட்சி துணைத்தலைவர் இந்தியன் செந்தில், ஒன்றிய துணைச் செயலாளர்கள் முத்துக்குமார், ஷீலா சொக்கநாதன், பொருளாளர் பாஸ்கரன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர்கள் புகழேந்தி, சிவசுப்பிரமணியன், சுற்றுச் சூழல் அணிதுணை அமைப்பாளர் அனந்தகிருஷ்ணன், ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ், ஒன்றிய கவுன்சிலர் குமரேசன், முன்னாள் ஒன்றிய செயலாளர் வி.பிஜெகன்னாதன், துணைச் செயலாளர் அலாவுதீன், நிர்வாகிகள் செல்வகுமார், தனுஷ் கோடி, அருள்மணி, நாகராஜன், குடோன்மணி, இளைஞரணி அருள் பிரசாத், அஞ்சப்பர் ஜெயராமன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஜெயக்குமார், மீனா மனோகரன், மணி சேகரன், ஒன்றிய கவுன்சிலர்கள் உதயசூரியன், ரம்யா செல்வகுமார், கலைச்செல்வி, ஏ.எல். சந்திரன் வர்த்தக அணி பார்த்திபன், அழகுராஜ், சரவணன், துரைச்சாமி, செந்தில், தீபன், திருமாறன், அமுதன், முரசொலி கார்த்தி, உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### நா.ராதாகிருஷ்ணன் தலைமையில் இரா.துரைராஜ் எம்.சி. – தா.மோகன்குமார் முன்னிலையில்

## சைதை 168 வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை! கோ.வி.லெனின் – வாசுகி பாண்டியன் பங்கேற்பு!

சென்னை, செப். 4-

சைதை கிழக்கு 168-வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது என வட்டச் செயலாளர் நா.ராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 168வது வட்ட கழக பொது உறுப்பினர் கூட்டம் இன்று (4.09.2024 புதன்கிழமை) மாலை 6.00 மணிக்கு எண்93, பூந்தமல்லி சாலையில் உள்ள மணிமேகலை மினி ஹாலில் எனது (வட்ட கழக செயலாளர் நா.ராதாகிருஷ்ணன்) தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சைதை கிழக்கு பகுதி செயலாளரும் 13வது வார்டு குழு தலைவருமான இரா.துரைராஜ். 168 அ” வட்டச் செயலாளர் தா.மோகன்குமார் எம்.கி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பகுதி கழக பொருளாளர் ஆர்.அருணகிரி, மாவட்ட பிரதிநிதி டி.வி.நரசிம்மன், ஆர்.டி.மூர்த்தி, இரா.பால்ராஜ், வட்ட கழக நிர்வாகிகள் பி .சென்னப்பன், இ.தனசேகரன், எம்.ராஜு, எஸ். அறிவானந்தம், எஸ்.தேவி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்கி சிறப்புரை நிகழ்த்துகிறார். மேலும் பகுதிச் செயலாளர் இரா.துரை ராஜ், சைதை சட்ட மன்ற தொகுதி மேலிட பார்வையாளர் கோ.வி.லெனின், கூட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி வாசுகி பாண்டியன் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்கி பேசுகின்றனர்.

பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு. ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, வட்டத்தில் உள்ள பகுதி பிரதிநிதிகள் அணிகளின் மாவட்ட மற்றும் பகுதி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

எனவே மேற்குறிப்பிட்டுள்ள கூட்டத்திற்கு 168 வது வட்ட கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் (BLA2) மற்றும் பாக பணியாளர்கள் கழக முன்னோடிகள் சார்பு மன்ற நிர்வாகிகள் செயல் வீரர்கள், கழக மகளிர்கள் அனைவரும் பெரும் திரளாக கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் வட்ட கழக செயலாளர் நா.ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை! செ.தமிழ்வேந்தன் முன்னிலையில்

## 71 -வது வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### வட்டச் செயலாளர் பரிமளா சுரேஷ்பாபு வேண்டுகோள்!

சென்னை செப் 5 -

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் வடக்குப் பகுதி 71 -வது வட்டக் கழகம் சார்பில் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று சிறப்புறையாற்றுகிறார் என வட்டச் செயலாளர் பரிமளா சுரேஷ்பாபு அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு :

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனையின்படி சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் வடக்கு பகுதி 71வது வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று ( 4-92024 புதன் கிழமை) மாலை 5.00 மணியளவில் வசந்த மாளிகை மண்டபம் 169/56, படேல் சாலை, பெரம்பூரில் வட்ட அவைத் தலைவர் தா.வே. ஏகாம்பரம் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் பகுதி செயலாளர் செ. தமிழ்வேந்தன், மாமன்ற உறுப்பினர் புனிதவதி எத்திராஜன், பொதுக் குழு உறுப்பினர் பி. உதய சங்கர், பகுதி துணை செயலாளர் பெரம்பூர்.ஆர். ராஜன், பகுதி அவைத் தலைவர் தில்லை. கதிரவன், பகுதி துணைச் செயலாளர் புல்லட் கி.ரமேஷ் , பெரம்பூர். ஆர்.மகேஷ் (செ.சி.மா அயலக அணி தலைவர்) ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு சிறப்புரை யாற்றுகிறார்

மேலும் மேயர் பிரியா ராஜன், கழக அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி., கழக அமைப்பு துணைச் செயலாளர் ப. தாயகம் கவி எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் டாக்டர் யாழினி ஆகியோரும் பங்கேற்று கழகப் பணிகள் குறித்து ஆலோசானை வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் 71வது வட்டக்குழுவிற்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள், பி.எல்.ஏ. மற்றும் கழக செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். பொருள்: கழக ஆக்க பணிகள்

இவ்வாறு முன்னாள் மாமன்ற உறுப்பினரும் 71வது வட்டச் செயலாளரமான பரிமளா சுரேஷ்பாபு தெரிவித்துள்ளார்.

### தா.வ.மு.கஜேந்திரன் தலைமை! இரா.லட்சுமணன் முன்னிலை!

## 39 ‘அ’ வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் !

### ஆர்.டி.சேகர் ,கலாநிதி வீராசாமி, ஜே.ஜே.எபினேசர், நந்தனம் நம்பிராஜன் பங்கேற்பு !

சென்னை,செப்.4

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 39(அ) வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (04.09.2024 புதன்கிழமை) மாலை 5.00 மணியளவில் டி.பி.ஆர் திருமண மாளிகை பூண்டிதங்கம்மாள் தெரு, புதுவண்ணையில் நடைபெறுகிறது.

39(அ) வட்ட கழக செயலாளர் தா.வ.மு.கஜேந்திரன், தலைமை வகிக்கிறார்.ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் முன்னிலை வகிக்கிறார்.

கே.அடைக்கலம், கே.சரவணன், பி.அனிதா, ஆர். ரங்கநாதன், எஸ்.சுரேஷ்குமார், டி.ஆனந்த்,ஆர்.அருள், ஏ.எம்.இளங்கோவன், ஆர். வெங்கட், எம்.சுரேஷ்குமார், எஸ்.தாமரைச்செல்வி, பாம்பே.லட்சுமி, எம். இலக்யா, வி.ஏ.பாப்பா ஆறுமுகம், டி.லெனின்,எ.அருள், இ.கார்த்திக், எஸ்.வேலாயுதம், ஆகியோர் வரவேற்கினறனர்.

கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, நந்தனம் நம்பி ராஜன், ஆர். வெற்றிவீரன், ஆகியோர் சிறப்புரையாற்றுகி ன்றனர்.

என்.அனிபா, ஆர்.டி. ராஜா, கே.பாலு, எம்.வேத லட்சுமி, கே.பி.சதிஷ்குமார், ஆர்.ரமேஷ், வி.முத்து, க. ராஜேஸ்வரி, எம்.எம்.சாமி, இ.ஆறுமுகம்,

எஸ்.வேலாயுதம், எஸ். மணிகண்டன், ஜி.துரைசாமி, எஸ்.டி.செல்வம், ஜி.சரவண குமார், பி.மாசிலாமணி, பி. கிருபாகரன், எஸ்.சசிகுமார், பி.பாஸ்கர்,வி.பாஸ்கர், டி. கார்த்திக், எஸ்.மணிமாறன், பாலகிருஷ்ணன், எஸ்.முத்து மாலை, எஸ்.விக்னேஷ், டி. கார்த்திக், எஸ்.சதிஷ், ஆர். ஜெ.ரமேஷ், ஜெ.கில்பர்ட், டி.செந்தில்குமார், எம். சதிஷ்குமார், எஸ்.சதிஷ்குமார், எம்.முருகன், எம்.சத்யா, படக்கடை ஆர்.செல்வம், ஆர். பிரகாஷ், ஏ.லோகநாதன், சி.லோகநாதன், ஆர். மோகன்,சுதாகர், தர்மதுரை, சேகர், ராமு, டி.சுந்தர் அப்பு, வி.முரளிகிருஷ்ணன், எம். லட்சுமணன், வி.ரித்திஷ்,பி. ஹரிஷ், டி.அருள், ஆர். அருண்மொழி, எஸ்.கவிதா, ஜெ.சுரேஷ் ஷாம்ஜோஸ்வா, எம்.மணிகண்டன், இ. வேதகிரி,கண்ணன், பி.துரை, சேக் முகம்மது, டி.செல்வகுமார், டி.ரமேஷ்,டி.பாண்டியன், எ.மோகன்ராஜ், பி. சீனிவாசன், ஜி.துரை, தயாளன், எஸ்.உமாபதி, எம். மோகன்ரா ஜ், பி.துரை,எம். நாகமுத்து, சி.தர்ஷன், தனுசு, ஜேம்ஸ்,எஸ்.சந்தோஷ், எம். மலர்கொடி, என்.மலர்விழி, எஸ்.சுந்தரி, எம்.லாவண்யா, எஸ்.அன்னக்கிளி, ஆர். ராஜேஸ்வரி, டி.ஜெயா, வி.ராஜகுமாரி, ஆர்.உமா, ஆர். கோமதி, பி.பரமேஸ்வரி, யமுனா ராணி, வி.கனகாம்பரம், செல்வி, ஜி.பெரி யநாயகி ,ராணி, சுந்தரி, கவிதா, ஜபுரு, ரோஸி,கவிதா மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

ஏ.டில்லிராஜன், நன்றி கூறுகிறார்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் தொகுதியில் 73 ஊராட்சிகளில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்படி 600 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணையினை க.சுந்தர் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி. ஆகியோர் வழங்கினர். இதில் ஒன்றிய பெருந்தலைவர் ஹேமலதா ஞானசேகரன் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர்கள் ஞானசேகரன், குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் வான்மதி, வட்டார வளர்ச்சி அலுவலர் லோகநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### பகுதிக் கழகச் செயலாளர் டி.காமராஜ் தலைமையில்

## பெருங்களத்தூர் வடக்கு பகுதிக் கழகக் கூட்டம்!

சென்னை, செப்.4-

தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகளின் ஆலோசனைக் கூட்டம் 4-வது மண்டலகுழுத்தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மனங்கள் நிறைவேற்றப்பட்டது.

வருகின்ற செப்டம்பர் 15-ல் நடைபெற்றிட உள்ள கழக முப்பெரும் விழா மற்றும் பவள விழாவை பகுதியில் மிகவும் சிறப்பாகவும் ஏழிச்சியாக கொண்டாடிடு வதை முன்னிட்டு கலந்து ஆலோசித்து அனைவரின் ஒருமித்த கருத்துடன் தீர்மனம் நிறைவேற்றப்பட்டது.

அனைத்து வட்டங்களில் கழக கொடி கம்பம் வர்ணம் அடித்தும் மிகவும்

பழைய கொடிக்கம்பங்களை புதுப்பித்தும் முக்கிய இடங்களில் கொடியேற்றல்.

அனைத்து வட்டங்களிலும் திராவிட மாடல் முதல் வரும் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் கழக ஆட்சியின் 3 ஆண்டு சாதனை சுவர் விளம்பரம் செய்தல்.

இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி உறுப்பினர் சேர்த்தல் மற்றும்2026 ஆண்டு நடைபெற்றிட உள்ள தேர்தலை முன்னிட்டு தற்போது அரசாங்கத்தால்

புதிய வாக்காளர்கள் சேர்த்தல் நீக்கல் மற்றும் சில வாக்கு சாவடிகளை அருகில் உள்ள பள்ளிகளுக்கு மாற்றிட கூடிய நிலையும் ஆகையால் இதை எல்லாம் உன்னிப்பாக கவனித்தும் கழக நிர்வாகிகளின் பணிகளில் தேய்வு இல்லாமல் அனைத்து வட்டங்கள் தேறும் கவனித்தும் பணி செய்ய ஊக்குவிக்கவும் அந்த அந்த வட்டத்தின் செயல்பாட்டினை மாநகர கழக செயலாளருக்கும் பகுதி கழக செயலாளருக்கு தகவல் தெரிவிக்கவும் கீழ் கண்ட மாநகர, பகுதி கழக நிர்வாகிகளையும் மற்றும் மாநகர இளைஞரணி நிர்வாகிகளை மேற்பார்வையாளராக நியமிக்கப்ப டுகிறார்கள்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி எத்தனையே இன்னல்களுக்கு இடையிலும் பின் வாங்கமால் ஃபார்முலா 4 கார் பந்தயத்தை திறம்பட சென்னை மாநகரத்தில் நடத்தி உலகத்தையே சென்னையை உற்று நோக்க வைத்து தெற்கு ஆசியாவுக்கே பெருமை சேர்த்து போட்டியை நடத்தவே முடியாது என்று கொக்கரித்த கூட்டத்தின் முகத்தில் கறியை பூசி நினைத்ததை வெற்றிகரமாக நடத்தி காட்டிய எங்களின் இனியவர் இளையவர் இளைஞர்களின் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றி .

மேற்பார்வையாளர் விவரம்

வார்டு : 32 - பகுதி துணை செயலாளர் ஆர் . செல்வகுமார்

வார்டு : 33 - பகுதி துணை செயலாளர் ஜா. ரவிக்குமார்

வார்டு : 49 - மு.மாவட்ட பிரதிநிதி எஸ்.ஜி.கருணாகர பாண்டியன்

வார்டு : 50 - மாநகர வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் இரா.செல்வ குமார் எக்ஸ் எம் சி

வார்டு : 51 - டி.ஆர் கோபி எம் சி

வார்டு : 52 - மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ச.இராஜேஷ்

வார்டு : 53 - மாணவர் அணி அமைப்பாளர் எஸ் . கார்த்திக் ஆகியோரை நியமித்து ஒருமித்த கருத்துடன் திறம்பட செயலற்றிட கேட்டு தீர்மானம் நிறை வேற்றப்பட்டது .



சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் வடக்கு பகுதிக்கு உட்பட்ட வட்ட செயலாளர்கள் கூட்டம் அவைத் தலைவர் பா.பிரபு தலைமையிலும் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. முன்னிலையிலும் பகுதி கழக செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழக கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்தும் மற்றும் அணைத்து வட்டங்களிலும் உடனடியாக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்துவது என தீர்மானம் நிறைவேட்டறப்பட்டது. மேலும் செப்டம்பர் 17 அன்று நடைபெறும் முப்பெரும் விழாவில் அண்ணாநகர் வடக்கு பகுதியின் சார்பில் 1000 பேர் கலந்துகொண்டு விழாவினை சிறப்பிப்பது என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேட்டறப்பட்டது.